DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.358 /2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-8 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ஜெயப்பிரிட்டா(காவல் துறை ஆய்வாளர்) |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 07.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரையில் ரயில்வே காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.06.2022 தேதி திருவாடானை அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் நான் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது காலை 9.00 மணிக்கு திருப்பாலைக்குடி சேர்ந்த கிட்டப்பாமகன் ஸ்ரீஜா என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.7/2022 u/s

354(D),IPC and 4 of TNPHW ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு நான் 24.06.2022 ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரவீன்குமார், நாகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின் அன்றைய தினமே வழக்கின் புகார்தாரரான ஸ்ரீஜா, அ.சா.2 மகாலெட்சுமி, அ.சா.3 கிட்டப்பா, அ.சா.4 வசந்தாராணி, அ.சா.5 சந்திரகமலி, அ.சா.6 சமயமுத்து, மகசர் சாட்கிள் அ.சா.7 பிரவீன்குமார் மற்றம் சாட்சி நாகநாதன் ஆகியோர்களை விசாரித்து தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரி தலைமறைவாக இருந்தவரை தேடி வந்தநிலையில் 29.06.2022 தேதி காலை 11.00 மணிக்கு உப்பூர் எம்எஸ் ஓட்டல் அருகே வைத்து எதிரியை கைதுசெய்து நிலையம் கொண்டு வந்து உரிய ஆவணங்களுடன் இராமநாதபுரம் கூடுதல் மகிளா நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

5. அதன்பின் வழக்கின் விசாரணை நிலுவையில் இருந்த கட்டத்தில் நான் பணியிட மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கின் கோப்பினை புதிதாக பொறுப்பேற்ற ஆய்வாளர் வனிதாராணியிடம் ஒப்படைத்தேன். அதன்பின் காவல் ஆய்வாளர் வனிதாராணி சாட்சிகள் அனைவரையும் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் தெரிவித்தவாறே அவரிடமும் தெரிவித்துள்ளதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்ற விவரத்தை வழக்கு கோப்பினை பார்த்து தெரிந்துகொண்டேன். அதன்பின் ஆய்வாளர் வனிதாராணி விசாரணையின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை s 354(D),IPC and 4 of TNPHW ACT லிருந்து s 354(D), 341 PC and 4 of TNPHW ACT ஆக 31.10.2022 தேதி மாற்றம்செய்த விவரத்தை வழக்கு கோப்பினை பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த சட்டப்பிரிவு மாற்றுஅறிக்கை அ.சா.ஆ 8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

பின் வழக்கின் புலன் விசாரணை முடித்து  காவல ஆய்வாளர் வனிதாராணி எதிரி மீது இதச பிரிவுகள்  354(D), 341 PC and 4 of TNPHW ACT ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை வழக்கு கோப்பினை பார்த்து தெரிந்து கொண்டேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.வழக்கு சமபவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 10.06.2022 என அ.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சமபவம் குறித்த தகவல் 24.06.2022 தேதி காலை 9 மணிக்கு எங்களுக்கு கிடைக்கபெற்றது என்றால் சரிதான்.  அ.சா.ஆ.1 புகார் மனு அளித்தவுடன் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துவிட்டோம் என்றால் சரிதான். அதன்பின் காலை 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று பார்வையிட்டேன் என்றால் சரிதான்.  வழக்கின் சாட்சிகள் அ.சா.2 முதல் அ.சா.6 வரை உள்ளவர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் 17.06.2022 தேதி எதிரி குடுமபத்தினர் மீதும் அ.சா.1 குடும்பத்தினர் மீதும் எதிர் எதிர் முதல்தகவல் அறிக்கைகள் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

2.புகார்தாரர் 10.06.2022 தேதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாக 17.06.2022 தேதி திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன்மீது நடவடிக்கை எடுக்காததால் 24.06.2022 தேதி எங்கள் காவ்லநிலையத்தில் புகார் அளித்ததாக அ.சா.ஆ.1 புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.   திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் புகார்தாரர் அளித்த புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் நான் போனில் விசாரித்தபோது அது ஏதோ அடிதடி பிரச்சனை என்று தெரிவித்தார்கள். அது வேறு காவல்நிலையம் என்பதால் அந்தபுகாரின் விவரங்கள் எனக்கு தெரியாது.

3. இவ்வழக்கில் குற்றஇறுதியறிக்கையானது முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்து 4 மாதங்கள் சென்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பணியிட மாறுதலில் சென்றுவிட்டேன். வேறு ஆய்வாளர் தான் மேல்விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தார். நான் 2022 ஆண்டு  ஜீலை மாதத்தில்

பணியிடமாறுதல் ஆனேன். எதிரி குடும்பத்திற்கும் அ.சா.1 குடுமபத்திற்கும் ஏற்கனவே முன் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அ.சா.1 சொன்னவாறு சொன்ன தேதியில் சம்பவம் எதுவுமம் நடைபெறவில்லை என்றும் இருதரப்பினருக்கும் உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 திருப்பாலைகுடி காவல்நிலையத்தில் எற்கனவே கொடுத்த புகார் மனுவை தகவல் உண்மை இல்லை என்று முடித்துவிட்டதால் மீண்டும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த புகாரை நான் சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல.

4. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் விளம் கிளினிக்கின் முன்னால் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் இருந்திருக்கலாம் அந்த விவரம் தெரியாது., நான் சம்பவயிடத்திற்கு சென்று விசாரி்த்து இருந்தால் அந்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் நான் விசாரணைக்கு சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எ திரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.